بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

1

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا عَمِلْتُ وَمِنْ شَرِّ مَا لَمْ أَعْمَلْ

அல்லாஹும்ம இன்னி அஊது பி(B)க மின் ஷர்ரி மா அமில்து வமின் ஷர்ரி மா லம் அஃமல்

யா அல்லாஹ்! நான் செய்தவற்றின் தீங்கை விட்டும், செய்யாதவற்றின் தீங்கை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2716

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

2

رَبِّ اغْفِرْ لِي خَطِيئَتِي يَوْمَ الدِّيْنِ

ரப்பிஃபிர்லி ஹ(ஃ)தீஅதீ யவ்முத் தீனி

எனது நாயனே! நியாயத் தீர்ப்பு நாளில் எனது தவறுகளை மன்னிப்பாயாக

அறிவிப்பவர் ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 214

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

3

## اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ الْعَافِيَةَ

அல்லாஹும்ம இன்னி அஸ்அலுகல் ஆபி(f)யா

யா அல்லாஹ் நான் உன்னிடம் ஆரோக்கியத்தைக் கேட்கிறேன்

அறிவிப்பவர்: அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள்
திர்மிதி 3514, அஹ்மத் 1783.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

4

اَللّٰهُمَّ اهْدِنِيْ وَسَدِّدْنِيْ

## அல்லாஹும் மஹ்தினி வஸத்தினி

இறைவா எனக்கு நல்வழி காட்டுவாயாக! நேர்மையானதை சரியாகச் செய்ய எனக்கு வாய்ப்பளிப்பாயாக!

அறிவிப்பவர்: அலி (ரலி)அவர்கள், முஸ்லிம் 7086

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

5

اَللّٰهُمَّ مُصَرِّفَ الْقُلُوْبِ صَرِّفْ قُلُوْبَنَا عَلَى طَاعَتِكَ

அல்லாஹும்ம முஸர்ரிப(f) குலூபி ஸர்ரிப்(f) குலூபனா அலா தாஅதிக

இறைவா உள்ளங்களைத் திருப்புகின்றவனே! எங்கள் உள்ளங்களை உனக்குக் கீழ்ப்படிவதற்குத் திருப்புவாயாக!

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ரு (ரலி) அவர்கள், முஸ்லிம் 2654.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

6

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ، وَارْحَمْنِيْ، وَعَافِنِيْ، وَارْزُقْنِيْ

அல்லாஹும் மக்(gh)பி(f)ர்லீ வர்ஹம்னி
வ ஆபி(f)னி வர்ஸு(z)க்னி

இறைவா! என்னை மன்னிப்பாயாக! எனக்கு கருணை புரிவாயாக! எனக்கு ஆரோக்கியத்தை வழங்குவாயாக! எனக்கு வாழ்வாதாரத்தை அளிப்பாயாக!

அறிவிப்பவர்: அபூ மாலிக் அல் அஷ்ஜயி ஸஃத் பின் தாரிக் (ரலி) அவர்கள்,
முஸ்லிம் 5229.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

7

اَللَّهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ الْهُدَى وَالتُّقَى وَالْعَفَافَ وَالْغِنَى

அல்லாஹும்ம இன்னி அஸ்அலுகல் ஹுதா, வத்துகா, வல் அபா(f)ப(f) வல் கி(gh)னா

யா அல்லாஹ் நான் உன்னிடம் நேர்வழியை, இறையச்சத்தை, பேணுதலை, தன்னிறைவைக் கேட்கிறேன்

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரலி) அவர்கள், முஸ்லிம் 2721.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

8

اَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ زَوَالِ نِعْمَتِكَ، وَتَحَوُّلِ عَافِيَتِكَ، وَفُجَاءَةِ نِقْمَتِكَ، وَجَمِيْعِ سَخَطِكَ

அல்லாஹும்ம இன்னி அவூது பிக மின் ஸ(z)வாலி நிஃமதிக, வதஹவ்வுலி ஆபி(f)யதிக வுபு(f)ஜாஅதி நிக்மதிக வஜமீயி ஸகதிக.

யா அல்லாஹ்! உன் அருட்கொடைகள் (என்னை விட்டு) நீங்குவதை விட்டும். நீ (எனக்கு) அளித்த ஆரோக்கியத்தன்மை (என்னை விட்டு) மாறுவதை விட்டும் உனது திடீர் தண்டனையை விட்டும் உனது (சகலவிதமான) கோபங்களை விட்டும நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி)அவர்கள், முஸ்லிம் 2739

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

9

أَعُوذُ بِعِزَّتِكَ، الَّذِي لَا إِلَهَ إِلَّا أَنْتَ،
الَّذِي لَا يَمُوتُ، وَالْجِنُّ وَالإِنْسُ يَمُوتُونَ

அவூது பிஇஸ்(Z)ஸதிக அல்லதீ லா இலாஹ
இல்லா அந்த, அல்லதீ லா யமூது வல் ஜின்னு
வல் இன்ஸு யமூதூன்

(இறைவா!) உன் கண்ணியத்தின் பெயரால் பாதுகாப்புக் கோருகிறேன். உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. ஜின் இனத்தாரும் மனித குலத்தாரும் இறந்துவிடுவார்கள்; (ஆனால்,) நீ இறக்கமாட்டாய்

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள், புஹாரி 7383.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

10

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ جَهْدِ الْبَلَاءِ،
وَدَرَكِ الشَّقَاءِ، وَسُوْءِ الْقَضَاءِ، وَشَمَاتَةِ الْأَعْدَاءِ

அல்லாஹும்ம இன்னி அவூதுபிக மின் ஜஹ்தில்
பலாயி வதரகிஷ் ஷகாயி வ ஸூயில் களாயி
வஷமாததில் அஃதாஃ

யா அல்லாஹ் நான் உன்னிடம் தாங்கமுடியாத
சோதனை, அழிவில் வீழ்வது, விதியின் கேடு,
எதிரிகளால் ஏற்படும் மன உளைச்சல்
ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி)அவர்கள், புஹாரி 6616

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

11

اَللّٰهُمَّ أَصْلِحْ لِي دِينِي الَّذِي هُوَ عِصْمَةُ أَمْرِي،
وَأَصْلِحْ لِي دُنْيَايَ الَّتِي فِيهَا مَعَاشِي،
وَأَصْلِحْ لِي آخِرَتِي الَّتِي فِيهَا مَعَادِي،
وَاجْعَلِ الْحَيَاةَ زِيَادَةً لِي فِي كُلِّ خَيْرٍ،
وَاجْعَلِ الْمَوْتَ رَاحَةً لِي مِنْ كُلِّ شَرٍّ

**அல்லாஹூம்ம அஸ்லிஹ்லி தீனி அல்லதி ஹுவ இஸ்மது அம்ரி.**
**வ அஸ்லிஹ்லி துன்யா அல்லதி பீ(f)ஹா மஆஷீ.**
**வ அஸ்லிஹ்லி ஆகி(ͅ)ரத்தி அல்லதி பீ(f)ஹா மஆதீ.**
**வஜ்அலில் ஹயாத்த ஸி(Z)யாததல்லி ஃபீ குல்லி கை(ͅ)ர்.**
**வஜ்அலில் மவ்த ராஹத்தல்லி மின் குல்லி ஷர்.**

இறைவா! எனது காரியத்திற்கு பாதுகாப்பாக உள்ள எனது மார்க்கத்தை எனக்குச் சீர்படுத்துவாயாக! நான் வாழ வேண்டிய இம்மையை எனக்குச் சீர்படுத்துவாயாக! நான் திரும்பி வரவுள்ள மறுமையை எனக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எனக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எனக்குக் காரணமாக்குவாயாக!)

**அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி)அவர்கள், முஸ்லிம் 2720**

بِسْــمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

12

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ، وَالْعَجْزِ وَالْكَسَلِ، وَالْبُخْلِ، وَالْجُبْنِ، وَضَلَعِ الدَّيْنِ، وَغَلَبَةِ الرِّجَالِ

**அல்லாஹும்ம இன்னி அஊது பிக மினல் ஹம்மி, வல்ஹஸ(Z)னி, வல் அஜ்ஸி(Z), வல்கஸலி, வல்புக்( خ )லி, வல்ஜுப்னி, வ ளலஇத் தைனி, வ க(gh)லபதிர் ரிஜால்.**

இறைவா! (வருங்காலத்தைப் பற்றியக்) கவலையிலிருந்தும், (நடந்து முடிந்துவிட்டவை பற்றிய) துக்கத்திலிருந்தும், இயலாமையிலிருந்தும், சோம்பலிலிருந்தும் கஞ்சத்தனத்திலிருந்தும், கோழைத்தனத்திலிருந்தும், கடன் சுமையிலிருந்தும், பிற மனிதர்களின் அடக்கு முறைகளிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.)

**அறிவிப்பவர்: அனஸ் (ரலி)அவர்கள், புஹாரி 6363**

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

13

اَللَّهُمَّ لَكَ أَسْلَمْتُ، وَبِكَ آمَنْتُ، وَعَلَيْكَ تَوَكَّلْتُ، وَإِلَيْكَ أَنَبْتُ، وَبِكَ خَاصَمْتُ، اَللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِعِزَّتِكَ، لَا إِلَهَ إِلَّا أَنْتَ، أَنْ تُضِلَّنِي، أَنْتَ الْحَيُّ الَّذِي لَا يَمُوتُ، وَالْجِنُّ وَالْإِنْسُ يَمُوتُونَ

அல்லாஹும்ம லக அஸ்லம்து, வ பிக ஆமன்து, வ அலைக தவக்கல்து, வ இலைக அனப்து, வ பிக கா(خ)ஸம்து, அல்லாஹும்ம இன்னி அஊது பி இஸ்ஸத்திக,லாயிலாஹ இல்லா அந்த, அன் துளில்லனி, அன்தல் ஹய்யுல்லதி லா யமூது, வல்ஜின்னு வல்இன்ஸு யமூதூன்

இறைவா! உனக்கே அடிபணிந்தேன். உன்மீதே நம்பிக்கை கொண்டுள்ளேன். உன்னையே சார்ந்துள்ளேன். உன்னிடமேதிரும்புகிறேன். உன் உதவியாலேயே (எதிரிகளிடம்) வழக்காடுவேன். இறைவா! நான் வழிதவறாமலிருக்க உனது கண்ணியத்தின் மூலம் நான் பாதுகாப்புக் கோருகிறேன். உன்னைத் தவிர வேறு இறைவனில்லை. ஜின் இனத்தாரும் மனித குலத்தாரும் இறந்துவிடுவார்கள்; ஆனால் நீ இறக்காமல் நிலைத்திருப்பவன்

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 5261

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

14

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْعَجْزِ، وَالْكَسَلِ، وَالْجُبْنِ، وَالْبُخْلِ، وَالْهَرَمِ، وَعَذَابِ الْقَبْرِ اَللّٰهُمَّ آتِ نَفْسِيْ تَقْوَاهَا، وَزَكِّهَا أَنْتَ خَيْرُ مَنْ زَكَّاهَا، أَنْتَ وَلِيُّهَا وَمَوْلَاهَا. اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ عِلْمٍ لَّا يَنْفَعُ، وَمِنْ قَلْبٍ لَّا يَخْشَعُ، وَمِنْ نَفْسٍ لَّا تَشْبَعُ، وَمِنْ دَعْوَةٍ لَّا يُسْتَجَابُ لَهَا.

**அல்லாஹும்ம இன்னி அஊது பிக்க மினல் அஜ்ஸி, வல்கஸலி, வல்ஜுப்னி, வல்புக்(ஃ)லி, வல்ஹரமி, வ அதாபில் கப்ர். அல்லாஹும்ம ஆத்தி நப்(f)ஸீ தக்வாஹா, வ ஸ(Z)க்கிஹா, அன்த கை(ஃ)ரு மன் ஸ(Z)க்காஹா, அன்த வலிய்யுஹா வ மவ்லாஹா. அல்லாஹும்ம இன்னி அஊது பிக்க மின் இல்மி(ன்)லா யன்ப(f)உ, வ மின் கல்பில்லா யக்(ஃ)ஷஉ, வ மின் நப்(f)ஸின் லா தஷ்பஉ, வ மின் தஃவதில்லா யுஸ்தஜாபு லஹா.**

இறைவா! உன்னிடம் நான் இயலாமையிலிருந்தும் சோம்பலிலிருந்தும் கோழைத்தனத்திலிருந்தும் கருமித்தனத்திலிருந்தும் தள்ளாமையிலிருந்தும் மண்ணறையின் வேதனையிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன். இறைவா! எனது உள்ளத்தில் உன்னைப் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தி, அதைத் தூய்மைப்படுத்துவாயாக! அதைத் தூய்மைப்படுத்துவோரில் நீயே சிறந்தவன். நீயே அதன் உரிமையாளன்; அதன் காவலன். இறைவா! உன்னிடம் நான் பயனளிக்காத கல்வியிலிருந்தும் உன்னை அஞ்சாத உள்ளத்திலிருந்தும் திருப்தியடையாத மனத்திலிருந்தும் ஏற்கப்படாத பிரார்த்தனையிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன்.

**அறிவிப்பவர்: ஸைத் பின் அர்கம் (ரலி) அவர்கள், முஸ்லிம் 5266**

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

15

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اَللَّهُمَّ اغْفِرْ لِيْ خَطِيْئَتِيْ وَجَهْلِيْ، وَإِسْرَافِيْ فِيْ أَمْرِيْ، وَمَا أَنْتَ أَعْلَمُ بِهِ مِنِّيْ. اَللَّهُمَّ اغْفِرْ لِيْ هَزْلِيْ وَجِدِّيْ وَخَطَايَايَ وَعَمْدِيْ، وَكُلُّ ذَلِكَ عِنْدِيْ

அல்லாஹும் மக்(غ)பி(ف)ர்லி க(خ)தீஅதீ, வ ஜஹ்லி, வ இஸ்ராபி(ف) ஃபீ அம்ரி, வமா அந்த அஃலமு பிஹி மின்னி, அல்லாஹும் மக்(غ)பி(ف)ர்லி ஹஸ்(ز)லி வ ஜித்தி, வ க(خ)தாயாய வ அம்தி, வ குல்லு தா(ذ)லிக இன்தி

இறைவா! என் குற்றங்களையும் என் அறியாமையையும், என் செயல்களில் நான் மேற்கொண்ட விரயத்தையும், மேலும், என்னை விட நீ எவற்றையெல்லாம் அறிந்துள்ளாயோ அவற்றையும் மன்னித்திடுவாயாக! இறைவா! நான் விளையாட்டாகச் செய்ததையும், வினையாகச் செய்ததையும், தவறுதலாகச் செய்ததையும், வேண்டுமென்றேச் செய்ததையும் மன்னித்திடுவாயாக! இவை யாவும் என்னிடம் இல்லாமலில்லை.

அறிவிப்பவர்: அபூ மூஸா அல் அஷ்அரீ (ரலி)அவர்கள், புஹாரி 6399

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

16

يَا مُقَلِّبَ الْقُلُوبِ
ثَبِّتْ قَلْبِي عَلَى دِينِكَ

யா முகல்லிபல் குலூபி த(ثَ)ப்பித் கல்பி அலா தீனிக்.

உள்ளங்களை புரட்டுபவனே! எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் உறுதியாக ஆக்குவாயாக.

அறிவிப்பவர்: உம்மு ஸலமா (ரலி)அவர்கள், திர்மிதி 3522

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

17

اَللّٰهُمَّ اٰتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَّفِى الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

அல்லாஹும்ம ஆதினா பி(ف)த்துன்யா ஹஸனதவ் வபி(ف)ல் ஆகி(خ)ரத்தி ஹஸனதவ் வகினா அதாபன்னார்

யா அல்லாஹ்! எங்களுக்கு இவ்வுலகில் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக; மறுமையிலும் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக; இன்னும் எங்களை(நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் காத்தருள்வாயாக!

அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி)அவர்கள், முஸ்லிம் 5219

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

18

اَللَّهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ الْفِرْدَوْسَ أَعْلَى الْجَنَّةَ

அல்லாஹும்ம இன்னி அஸ்அலுகல் பி(ஃ)ர்தவ்ஸ அஃலல் ஜன்னஹ்

யா அல்லாஹ் நான் உன்னிடம் உயர்ந்த சுவர்க்கமாகிய பி(ஃ)ர்தவ்ஸைக் கேட்கிறேன்

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி) அவர்கள், புஹாரி 2789

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

19

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ النَّارِ
اَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ
اَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الفِتَنِ مَاظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ
اَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ فِتْنَةِ الدَّجَّال

அல்லாஹும்ம இன்னி அஊது பிக மின் அதாபின்னாரி, அல்லாஹும்ம இன்னி அஊது பிக மின் அதாபில் கப்ரி,அல்லாஹும்ம இன்னி அஊது பிக மின பி(ஃ)தனி மா த(ظ)ஹர மின்ஹா வமா பதன, அல்லாஹும்ம இன்னி அஊது பிக மின் பி(ஃ)த்னதித் தஜ்ஜால்.

யா அல்லாஹ் நான் உன்னிடம் நரகத்தின் வேதனையை விட்டும், கப்ரின் வேதனையை விட்டும், வெளிப்படையான மறைமுகமான குழப்பங்களை விட்டும், தஜ்ஜாலின் குழப்பத்தை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பவர்: ஸைZத் இப்னு ஸாபித் (ரலி) அவர்கள், முஸ்லிம் 5502

بِسْــمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

20

رَبِّ اغْفِرْ لِي خَطِيئَتِي وَجَهْلِي، وَإِسْرَافِي فِي أَمْرِي كُلِّهِ، وَمَا أَنْتَ أَعْلَمُ بِهِ مِنِّي، اَللَّهُمَّ اغْفِرْ لِي خَطَايَايَ، وَعَمْدِي وَجَهْلِي وَهَزْلِي، وَكُلُّ ذَلِكَ عِنْدِي، اَللَّهُمَّ اغْفِرْ لِي مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ، وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ، أَنْتَ الْمُقَدِّمُ وَأَنْتَ الْمُؤَخِّرُ، وَأَنْتَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

ரப்பிக்(غ)பி(ف)ர்லி கதீஅதீ, வ ஜஹ்லி, வ இஸ்ராபி(ف) ஃபீ அம்ரி குல்லிஹி, வமா அந்த அஃலமு பிஹி மின்னி, அல்லாஹும் மக்(غ)பி(ف)ர்லி க(خ)தாயாய வ அம்தி, வ ஜஹ்லி, வ ஹஸ்(ز)லி வ குல்லு தாலிக இந்தி. அல்லாஹும் மக்(غ)பி(ف)ர்லி மா கத்தம்து , வ மா அஹ்(خ)ஹர்து, வமா அஸ்ரர்து வமா அஃலன்து அன்தல் முகத்திமு, வ அன்தல் முஅஹ்(خ)ஹிரு, வ அன்த அலா குல்லி ஷையின் கதீர்.

என் இறைவா! என் குற்றங்களையும், என் அறியாமையையும், என் செயல்கள் அனைத்திலும் நான் மேற்கொண்ட விரயத்தையும் மன்னித்திடுவாயாக. மேலும், என்னை விட நீ எவற்றையெல்லாம் அறிந்துள்ளாயோ அவற்றையும் மன்னித்திடுவாயாக. இறைவா! நான் தவறுதலாகச் செய்ததையும், வேண்டுமென்றே செய்ததையும், அறியாமல் செய்ததையும், அறிந்து செய்ததையும் மன்னித்திடுவாயாக. இவை யாவும் என்னிடம் இல்லாமலில்லை. இறைவா! நான் முன்னால் செய்ததையும், பின்னால் செய்ததையும், இரகசியமாகச் செய்ததையும் பகிரங்கமாகச் செய்ததையும் மன்னித்திடுவாயாக. நீயே முன்னேற்றம் அடையச் செய்பவன். பின்னடைவு ஏற்படச் செய்பவனும் நீயே! நீ அனைத்தின் மீதும் ஆற்றல் பெற்றவன்.

**அறிவிப்பவர்: அபூ மூஸா அல் அஷ்அரீ (ரலி) அவர்கள், புஹாரி 6398**

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

21

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் தூங்கும் முன் ஓதிய துஆ

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي أَطْعَمَنَا
وَسَقَانَا، وَكَفَانَا وَآوَانَا،
فَكَمْ مِمَّنْ لَا كَافِيَ لَهُ وَلَا مُؤْوِيَ

அல்ஹம்து லில்லாஹில்லதி அத்(ط)அமனா வ சகானா வ கபா(ف)னா வ ஆவானா. ப(ف)கம் மிம்மல்லா காபி(ف)ய லஹு, வலா முஃவிய

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனே நமக்கு உணவளித்தான். குடிநீர் வழங்கினான். (நம் தேவைகளை நிறைவேற்றி) போதுமான அளவுக்குக் கொடுத்தான். தஞ்சமளித்தான். ஆனால், போதுமாக்கி வைப்பதற்கோ தஞ்சமளிப்பதற்கோ ஆளில்லாமல் எத்தனையோ பேர் இருக்கின்றனர்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 5258

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

22

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## துன்பத்தின் போது நபி(ﷺ) அவர்கள் ஓதிய சிறந்த துஆ

لَا إِلَهَ إِلَّا اللَّهُ الْعَظِيمُ الْحَلِيمُ

لَا إِلَهَ إِلَّا اللَّهُ رَبُّ الْعَرْشِ الْعَظِيمِ

لَا إِلَهَ إِلَّا اللَّهُ رَبُّ السَّمَوَاتِ

وَرَبُّ الْأَرْضِ وَرَبُّ الْعَرْشِ الْكَرِيمِ

லாயிலாஹ இல்லல்லாஹு அழீ(ظ)முல் ஹலீம்.
லாயிலாஹ இல்லல்லாஹு ரப்புல் அர்ஷி(ش)ல் அழீ(ظ)ம்.
லாயிலாஹ இல்லல்லாஹு ரப்புஸ் ஸமாவாதி(ت),
வ ரப்புல் அர்ளி(ض), வரப்புல் அர்ஷி(ش)ல் கரீம்.

கண்ணியமிக்கோனும் பொறுமை மிக்கோனுமாகிய அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. மகத்துவமிக்க அர்ஷின் அதிபதியான அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியும் சங்கைமிகு அர்ஷின் அதிபதியுமான அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புஹாரி 6346

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

23

இப்ராஹீம்(அலை) மற்றும் முஹம்மது(ﷺ)அவர்கள் இருவரும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு ஓதிய துஆ

أَعُوذُ بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّةِ مِنْ كُلِّ شَيْطَانٍ وَهَامَّةٍ وَمِنْ كُلِّ عَيْنٍ لَامَّةٍ

அஊது பி கலிமாதி(ت)ல்லாஹித் தா(ت)ம்ம மின் குல்லி ஷை(ش)தா(ط)னிவ்வ ஹாம்ம வமின் குல்லி ஐனில்லாம்ம.

அல்லாஹ்வின் முழுமையான (குணமளிக்கும்) சொற்களைக் கொண்டு ஒவ்வொரு ஷைத்தானிடமிருந்தும் நச்சுப் பிராணியிடமிருந்தும் தீய எண்ணத்துடன் தீண்டும் (பொறாமைக்) கண்ணிலிருந்தும் அவனிடம் பாதுகாப்புக் கோருகிறேன்"

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புஹாரி 3371

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

24-1

## இஸ்திகாரா துஆ

اَللَّهُمَّ إِنِّيْ أَسْتَخِيرُكَ بِعِلْمِكَ وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ، وَأَسْأَلُكَ
مِنْ فَضْلِكَ الْعَظِيْمِ، فَإِنَّكَ تَقْدِرُ وَلَا أَقْدِرُ، وَتَعْلَمُ
وَلَا أَعْلَمُ، وَأَنْتَ عَلَّامُ الْغُيُوبِ، اَللَّهُمَّ إِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا
الأَمْرَ خَيْرٌ لِّيْ فِيْ دِيْنِيْ وَمَعَاشِيْ وَعَاقِبَةِ أَمْرِيْ عَاجِلِ أَمْرِي
وَآجِلِهِ فَاقْدُرْهُ لِيْ وَيَسِّرْهُ لِيْ، ثُمَّ بَارِكْ لِيْ فِيهِ، وَإِنْ كُنْتَ
تَعْلَمُ أَنَّ هَذَا الْأَمْرَ شَرٌّ لِّيْ فِيْ دِيْنِيْ وَمَعَاشِيْ وَعَاقِبَةِ أَمْرِيْ
فِيْ عَاجِلِ أَمْرِيْ وَآجِلِهِ فَاصْرِفْهُ عَنِّيْ وَاصْرِفْنِيْ عَنْهُ، وَاقْدُرْ
لِيْ الْخَيْرَ حَيْثُ كَانَ، ثُمَّ أَرْضِنِي

அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி)அவர்கள்,
புஹாரி 6382, 1162, 7390.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

24-2

## இஸ்திகாரா துஆ

அல்லாஹும்ம இன்னி அஸ்தகீ(خ)ருக பி இல்மிக,

வ அஸ்தக்திருக பி குத்ரத்திக,

வ அஸ்அலுக மின் ப(ف)ழ்(ض)லிகல் அழீ(ظ)ம்.

ப(ف)இன்னக தக்திரு வலா அக்திரு

வதஃலமு வலா அஃலமு வஅன்த அல்லாமுல் கு(غ)யூப்.

அல்லாஹும்ம இன்குன்த தஃலமு அன்ன ஹாதல் அம்ர கை(خ)ருல்லி பீ(ف) தீனி, வமஆஷி(ش) , வ ஆகிபதி அம்ரி ஆஜிலி அம்ரி வஆஜிலிஹி ப(ف)க்துர்ஹுலி வ யஸ்ஸிர்ஹுலி ஸு(ث)ம்ம பாரிக்லி பீ(ف)ஹி

வ இன் குன்த தஃலமு அன்ன ஹாதல் அம்ர ஷ(ش)ர்ருல்லி பீ(ف) தீனி, வ மஆஷி(ش), வ ஆகிபதி அம்ரி பீ(ف) ஆஜிலி அம்ரி வ ஆஜிலிஹி

ப(ف)ஸ்ரிப்(ف)ஹு அன்னி, வஸ்ரிப்(ف)னி அன்ஹு, வக்துர்லியல் கை(خ)ர ஹைது(ث) கான, ஸு(ث)ம்ம அர்ளி(ض)னி

அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி)அவர்கள்,
புஹாரி 6382, 1162, 7390.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

24-3

## இஸ்திகாரா துஆ

இறைவா! நீ அறிந்துள்ள படி (எது எனக்கு) நன்மை(யோ அ)தனை உன்னிடம் யாசிக்கிறேன். உனது ஆற்றலால் எனக்கு ஆற்றல் உண்டாக வேண்டுமென உன்னிடம் யாசிக்கிறேன். உன்னுடைய மாபெரும் அருளை யாசிக்கிறேன். ஏனெனில், 'நீயே ஆற்றல் மிக்கவன், எனக்கோ எந்த ஆற்றலும் கிடையாது. நீயே நன்கறிந்தவன், எனக்கோ எந்த அறிவும் கிடையாது. நீயே மறைவானவற்றை நன்கறிந்தவன்.

இறைவா! இந்தக் காரியம் எனக்கு 'என் மார்க்கத்திலும் என் வாழ்க்கையிலும் என் காரியத்தின் முடிவிலும்' அல்லது எனது உடனடியான, தாமதமான விவகாரத்திற்கும் நன்மையானதாக இருக்குமென நீ அறிந்திருந்தால் அதைச் சாதிப்பதற்குரிய ஆற்றலை எனக்கு வழங்குவாயாக!

இந்தக் காரியம் எனக்கு 'என் மார்க்கத்திலும் என் வாழ்க்கையிலும் என் காரியத்தின் முடிவிலும்' அல்லது எனது உடனடியான, தாமதமான விவகாரத்திற்கும் தீமையானதென நீ அறிந்திருந்தால் இக்காரியத்தை என்னைவிட்டுத் திருப்பிவிடுவாயாக! என்னையும் இக்காரியத்தைவிட்டுத் திருப்பிவிடுவாயாக.

நன்மை எங்கிருந்தாலும் அதை அடைவதற்குரிய ஆற்றலை எனக்கு வழங்குவாயாக! பிறகு அதில் எனக்குத் திருப்தியை அளித்திடுவாயாக.

அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி)அவர்கள்,
புஹாரி 6382, 1162, 7390.

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

25

## பாங்கிற்குப் பின் ஓத வேண்டிய துஆ

اللَّهُمَّ رَبَّ هٰذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ وَالصَّلَاةِ
الْقَائِمَةِ آتِ مُحَمَّدًا الْوَسِيلَةَ وَالْفَضِيلَةَ وَابْعَثْهُ
مَقَامًا مَحْمُودًا الَّذِي وَعَدْتَهُ

அல்லாஹும்ம ரப்ப ஹாதிஹித் தஃவதி(ت)த் தா(ت)ம்மதி(ت)
வஸ்ஸலாதி(ت)ல் காயிமதி(ت) ஆதி(ت) முஹம்மதனில்
வஸீ(ص)லத(ت) வல்பழீ(ض)லத(ت) வப்அஸ்(ث)ஹு மகாமம்
மஹ்மூதனில்லதீ வஅத்த(ت)ஹ்

பூரணமான இந்த அழைப்பின் இரட்சகனான அல்லாஹ்வே! நிலையான தொழுகைக்குரியவனே! முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கு வஸீலா என்ற அந்தஸ்தையும் சிறப்பையும் வழங்குவாயாக! நீ வாக்களித்தவாறு புகழுக்குரிய இடத்தில் அவர்களை எழுப்புவாயாக!

### சிறப்பு

இந்த துஆவை ஓதுகிறவருக்கு மறுமை நாளில் என்னுடைய பரிந்துரை கிடைத்து விடுகிறது' என்று இறைத்தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள்

அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி) அவர்கள், புஹாரி 614, 4719

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

26

## நபி(ﷺ)அவர்கள் நோயாளிகளை நலம் விசாரிக்கும் போது ஓதிய துஆ

اللَّهُمَّ رَبَّ النَّاسِ أَذْهِبِ الْبَاسَ، اشْفِهِ وَأَنْتَ الشَّافِي، لاَ شِفَاءَ إِلاَّ شِفَاؤُكَ، شِفَاءً لاَ يُغَادِرُ سَقَمًا

அல்லாஹும்ம ரப்பன்னாஸ், அத்ஹிபில் பஃஸ், அஷ்(ش)பி(ف)ஹி வ அன்தஷ்(ش)ஷாபீ(ف) லா ஷி(ش)பா(ف)அ இல்லா ஷி(ش)பா(ف)உக. ஷி(ش)பா(ف)அன் லா யுகா(غ)திரு ஸகமன்

இறைவா! மக்களை இரட்சிப்பவனே! துன்பத்தைப் போக்கி இவருக்குக் குணமளித்திடுவாயாக! நீயே குணமளிப்பவன். உன் நிவாரணத்தைத் தவிர வேறு நிவாரணமில்லை. நோய் அறவே இல்லாதவாறு குணமளிப்பாயாக!

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி)அவர்கள், புஹாரி 5743

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

27

## நபி(ﷺ)அவர்கள் நோயாளிகளை நலம் விசாரிக்கும் போது ஓதிய துஆ

اِمْسَحِ الْبَاسَ رَبَّ النَّاسِ، بِيَدِكَ الشِّفَاءُ، لَا كَاشِفَ لَهُ إِلَّا أَنْتَ

இம்ஸஹில் பஃஸ், ரப்பன்னாஸ்,
பியதிகஷ் ஷி(ش)பா(ف)உ,
லா காஷி(ش)ப(ف) லஹூ இல்லா அன்த

மக்களை இரட்சிப்பவனே! துன்பத்தைத் துடைப்பாயாக! நிவாரணம் உன் கரத்தில்தான் உள்ளது. உன்னைத் தவிர துன்பத்தை நீக்குபவர் வேறு எவரும் இல்லை.

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி)அவர்கள், புஹாரி 5744

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

28

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

بِسْمِ اللهِ

(மூன்று முறை)

أَعُوذُ بِاللهِ وَقُدْرَتِهِ مِنْ شَرِّ مَا أَجِدُ وَأُحَاذِرُ

(ஏழு முறை)

உஸ்மான் பின் அபில்ஆஸ் அஸ்ஸகஃபீ (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களிடம், தாம் இஸ்லாத்தைத் தழுவியது முதல் தமது உடலில் வலி ஏற்பட்டுள்ளதாக முறையிட்டார்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள்,

'நீர் உமது உடலில் வலியுள்ள இடத்தில் கையை வைத்து,

'பிஸ்மில்லாஹ்' என மூன்று முறை கூறிவிட்டு,

ஏழு முறை 'அவூது பில்லாஹி வ குத்ரத்திஹி

மின் ஷர்ரி மா அஜிது வ உஹாதிரு'

(பொருள்: நான் அல்லாஹ்விடம் அவனது ஆற்றலை முன்வைத்து, நான் உணர்கின்ற தீமையிலிருந்தும் நான் அஞ்சுகின்ற தீமையிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன்) என்று சொல்வீராக' என்றார்கள்.

முஸ்லிம் 4430

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

29

நபி(ﷺ) அவர்கள் நோயாளிக்காக கீழுள்ளவாறு கூறுவார்கள்

بِسْمِ اللَّهِ، تُرْبَةُ أَرْضِنَا، بِرِيقَةِ بَعْضِنَا، يُشْفَى سَقِيمُنَا، بِإِذْنِ رَبِّنَا.

பிஸ்மில்லாஹி துர்பத்து அர்ளி(ض)னா பிரீக(ق)தி பஃளி(ض)னா யுஷ்பா(ف) ஸகீ(ق)முனா பிஇத்னி ரப்பினா

அல்லாஹ்வின் பெயரால், எங்களில் சிலரின் உமிழ் நீரோடு எம்முடைய இந்த பூமியின் மண் (இணைந்தால் அது) எங்கள் இறைவனின் அனுமதியுடன் எங்களில் நோயுற்று இருப்பவரைக் குணப்படுத்தும்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புஹாரி 5745

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

30

நபி(ﷺ) அவர்கள் நோயுற்ற போது ஜிப்ரீல்(அலை) அவர்கள் ஓதிய துஆ

بِاسْمِ اللهِ يُبْرِيكَ، وَمِنْ كُلِّ دَاءٍ يَشْفِيكَ، وَمِنْ شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ، وَشَرِّ كُلِّ ذِي عَيْنٍ

பிஸ்மில்லாஹி யுப்ரீக, வ மின் குல்லி தாயின் யஷ்பீக, வ மின் ஷர்ரி ஹாசிதின் இதா ஹசத, வ ஷர்ரி குல்லி தீ அய்னின்

அல்லாஹ்வின் பெயரால். அவன் உங்களுக்கு குணமளிப்பானாக! அனைத்து நோயிலிருந்தும் உங்களுக்குச் சுகமளிப்பானாக! பொறாமைக்காரன் பொறாமைப்படும்போது ஏற்படும் தீமையிலிருந்தும், கண்ணேறு உள்ள ஒவ்வொருவரின் தீமையிலிருந்தும் (காப்பானாக!)

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், முஸ்லிம் 4402

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

31

**நபி(ﷺ) அவர்கள் நோயுற்ற போது ஜிப்ரீல்(அலை) அவர்கள் ஓதிய துஆ**

بِسْمِ اللّٰهِ أَرْقِيكَ مِنْ كُلِّ شَيْءٍ يُؤْذِيكَ

وَمِنْ شَرِّ كُلِّ نَفْسٍ أَوْ عَيْنٍ حَاسِدٍ

اللّٰهُ يَشْفِيكَ بِسْمِ اللّٰهِ أَرْقِيكَ

பிஸ்மில்லாஹி அர்கீக். மின் குல்லி ஷைஇன் யுஃதீக். வமின் ஷர்ரி குல்லி நஃப்சின் அவ் அய்னின் ஹாசித். அல்லாஹு யஷ்ஃபீக். பிஸ்மில்லாஹி அர்கீக்.

அல்லாஹ்வின் பெயரால் உமக்கு ஓதிப் பார்க்கிறேன். உமக்குத் தொல்லை தரும் அனைத்து அம்சங்களிலிருந்தும், பொறாமை கொள்ளக்கூடிய அனைவரின் அல்லது கண்களின் தீமையிலிருந்தும் உமக்கு அல்லாஹ் நிவாரணமளிப்பானாக. அல்லாஹ்வின் பெயரால் உமக்கு ஓதிப் பார்க்கிறேன்.

அறிவிப்பவர் : அபூசயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள், முஸ்லிம் 4403

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

32

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## لَا بَأْسَ طَهُورٌ إِنْ شَاءَ اللَّهُ

### லா பஃஸ தஹூருன் இன்ஷா அல்லாஹ்

நபி(ﷺ) அவர்கள் (நோயுற்றிருந்த) ஒரு கிராமவாசியிடம், அவரை நலம் விசாரிக்கச் சென்றார்கள்.

**நபி(ﷺ) அவர்கள் ஒரு நோயாளியிடம் நலம் விசாரிக்கச் சென்றால், 'கவலைப்பட வேண்டாம். இறைவன் நாடினால் (இது உங்கள் பாவத்தை நீக்கி) உங்களைத் தூய்மைப்படுத்திவிடும்' என்று கூறுவார்கள்.**

நபி(ﷺ) அவர்கள் கிராமவாசியிடம், 'கவலை வேண்டாம். இறைவன் நாடினால் உங்களைத் தூய்மைப்படுத்தும்' என்று கூறினார்கள்.

அந்தக் கிராமவாசி, 'நான் தூய்மை பெற்று விடுவேனா? முடியாது. இதுவோ வயது முதிர்ந்த பெரியவரைப் பீடிக்கிற சூடாகிக் கொதிக்கிற காய்ச்சலாகும். அது அவரை மண்ணறைகளைச் சந்திக்க வைக்கும்' என்று கூறினார். உடனே நபி(ﷺ) அவர்கள், 'அப்படியென்றால் ஆம்.' என்று கூறினார்கள்.

**அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள், புகாரி 3616**

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

33

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ أَحْيِنِي مَا كَانَتِ الْحَيَاةُ خَيْرًا لِي،
وَتَوَفَّنِي إِذَا كَانَتِ الْوَفَاةُ خَيْرًا لِي

அல்லாஹும்ம அஹ்யினீ மா கானதி(ت)ல் ஹயாது(ت)
கை(خ)ரன்லீ வ த(ت)வப்(ف)பனீ இதா கானதி(ت) ல்
வபா(ف)து(ت) கை(خ)ரன்லீ

**இறைத்தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள்.**

உங்களில் எவரும் தமக்கு நேர்ந்த எந்தத் துன்பத்தின் காரணத்தினாலும் மரணத்தை விரும்பிட வேண்டாம். அவ்வாறு அவர் ஏதேனும் செய்தேயாகவேண்டும் என்றிருந்தால், 'இறைவா! உயிர் வாழ்வது எனக்கு நன்மையாக இருப்பின், என்னை உயிர் வாழச் செய்வாயாக! நான் இறந்து போய்விடுவதே எனக்கு நன்மையாக இருப்பின் எனக்கு இறப்பைத் தருவாயாக!' என்று கேட்கட்டும்.

அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள். புகாரி 5671

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

34

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## மாலையில் ஓத வேண்டிய பாதுகாப்பு துஆ

أَعُوذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

அஊது பிகலிமாதில்லாஹித் தாம்மாதி மின் ஷர்ரி மா கலக்

அல்லாஹ்வின் நிறைவான வார்த்தைகளைக் கொண்டு அவன் படைத்தவற்றின் தீங்கிலிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன்.

### சிறப்பு

நபி(ﷺ) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, அல்லாஹ்வின் தூதரே! நேற்றிரவு என்னைத் தேள் ஒன்று கொட்டிவிட்டது. அதனால் நான் (நிம்மதியான தூக்கத்தை) இழந்துவிட்டேன் என்று கூறினார். அதற்கு நபி(ﷺ) அவர்கள், 'நீ மாலைப் பொழுதை அடையும்போது இதைக் கூறியிருந்தால் அது உனக்குத் தீங்கிழைத்திருக்காது என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 5248.

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

35

أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، رَضِيتُ بِاللَّهِ رَبًّا وَبِمُحَمَّدٍ رَسُولًا، وَبِالإِسْلَامِ دِينًا.

அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு, லா ஷரீக்க லஹு,
வ அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரசூலுஹு,
ரளீத்து பில்லாஹி ரப்பன், வபி முஹம்மதின் ரசூலன்,
வபில் இஸ்லாமி தீனன்

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையேதுமில்லை. முஹம்மத் (ﷺ) அவர்கள் அவனுடைய அடியாரும் தூதருமாவார்கள் என்று நான் உறுதிமொழிகிறேன்.

அல்லாஹ்வை இறைவனாகவும் முஹம்மத் (ﷺ) அவர்களை (அவனுடைய) தூதராகவும் இஸ்லாத்தை மார்க்கமாகவும் நான் மனநிறைவுடன் ஏற்றுக்கொண்டேன்.

## சிறப்பு

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: தொழுகை அறிவிப்பாளரின் அறிவிப்பைக் கேட்கக்கூடியவர் (அறிவிப்பு முடிந்த பின்பு) இதை சொன்னால் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும்.

அறிவிப்பாளர்: ஸஃத் இப்னு அபீ வக்காஸ் (ரலி)அவர்கள், முஸ்லிம் 630

# நாளும் ஒரு துஆவை மனனமிடுவோம்

36

## சுவனத்தைப் பெற்றுத்தரும் ஸய்யிதுல் இஸ்திஃபார்

اَللَّهُمَّ أَنْتَ رَبِّيْ لَا إِلَهَ إِلَّا أَنْتَ خَلَقْتَنِيْ وَأَنَا عَبْدُكَ وَأَنَا عَلَى عَهْدِكَ
وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ
وَأَبُوءُ بِذَنْبِي فَاغْفِرْ لِي فَإِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ.

அல்லாஹும்ம அந்த ரப்பீ. லா இலாஹ இல்லா அந்த. கலக்தனீ. வ அன அப்துக. வ அன அலா அஹ்திக, வ வஃதிக மஸ்ததஃது. அஊது பிக மின் ஷர்ரி மா ஸனஃது. அபூஉ லக பி நிஃமத்திக அலய்ய, வ அபூஉ பிதன்பீ, ஃபக்பிர்லீ. ஃபஇன்னஹு லா யக்பிருத் துனூப இல்லா அந்த

அல்லாஹ்! நீயே என் அதிபதி. உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உன் அடிமை, நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதி மொழியையும் வாக்குறுதியையும் என்னால் இயன்ற வரை நிறைவேற்றியுள்ளேன். நான் செய்தவற்றின் தீமைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். நீ எனக்கு அருட் கொடைகளை வழங்கியுள்ளாய் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மேலும், நான் பாவங்கள் புரிந்துள்ளதையும் உன்னிடம் (மறைக்காமல்) ஒப்புக்கொள்கிறேன். எனவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், பாவத்தை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறெவரும் இல்லை.

அறிவிப்பாளர்: ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி) அவர்கள், புகாரி 6306